4th March 1958]

THE HON. SRI. M. A. MANICKAVELU : இப்போது வண்ணாரப் பேட்டை ஆஸ்பத்திரியில் இடம் ரொம்ப நெருக்கடியிருப்பதால்தான் பல லட்ச ரூபாய் செலவு செய்து கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரி கட்ட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. அப்போது இந்த வசதியெல்லாம் செய்ய ஏற்பாடு செய்யலாம்.

SRI M. K. SOMASUNDARAM : பயிற்சி பெற்ற மருத்துவர்கள் இல்லாத காரணத்தால், திருநெல்வேலி ஜில்லாவில் "மெட்டர்னிடி சென்ட்டர்" ஏற்படுத்த முடியாத காரணத்தால், பயிற்சி பெறும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகப் படுத்த அரசாங்கம் முன்வருமா ? 1-10 p.m.

THE HON. SRI M. A. MANICKAVELU : 14-லிலிருந்து 26 ஆக அதிகப்படுத்துவதாக உத்தேசம்.

Nurses

* 165 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether there is any proposal to revise the existing working conditions of the nurses with regard to wages, working hours, and leave facilities?

THE HON. SRI M. A. MANICKAVELU : The answer is in the negative.

SRI N. K. PALANISAMI : நர்ஸ்களையும் சர்க்கார் சிப்பந்திகளாகக் கருதி, சர்க்கார் சிப்பந்திகளுக்கு எப்படி லீவு கொடுக்கப்படுகிறதோ, அதே அளவுக்கு லீவு கொடுக்க சர்க்கார் முயற்சிக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : சாத்தியமான வரையில் அம்மாதிரியான வசதிகளுக்கு வாய்ப்பு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

SRI M. P. SUBRAMANIAM : அரசாங்க மருத்துவ நிலையங்களில் வேலை செய்கின்ற நர்ஸ்களில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் பரகுபாடு இருப்பது சர்க்காருக்கு தெரியுமா ? பெண் நர்ஸ்களுக்கு சாப்பாடு முதலிய வசதிகள் செய்வதற்கும், மற்ற வசதிகள் செய்வதற்கும் ஒரு தனி நர்ஸ் முழு நேரமும் ஒதுக்கப்பட்டிருக்கிறாள். ஆனால் ஆண் நர்ஸ்களுக்கு அம்மாதிரி வசதிகள் கொடுக்கப்படுவதில்லை என்பது அரசாங்கத்துக்குத் தெரியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : ஆண்களுக்கும் பெண்களுக்கும் வித்தியாசம் இருக்கிறது. (சிரிப்பு).

SRI K. VINAYAKAM : Sir, since numerous complaints are received that the female nurses are often overworked and that their grievances have got to be looked into, are Government paying any extra wages for their overwork?

MR. SPEAKER : The hon. Member is putting the same question in another way. If the Hon. Minister is willing to answer, I have no objection.

THE HON. SRI M. A. MANICKAVELU : The overwork is necessitated on account of shortage. The Government are trying to fill up the shortage by increasing the number of nurses.